International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# திருவட்பயனும் வாழ்வியல் நெறியும்

**யசோதாதேவி கமலேஸ்வரன்**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை

**முதுமுனைவர் அரங்க. பாரி**
பேராசிரியர் மற்றும் முதன்மையர்
இந்திய மொழிப்புலம் - தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்

## முன்னுரை

இந்து சமயத்தின் இருபெரும் பிரிவுகள் சைவமும், வைணவமும் ஆகும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம் சைவம் எனப்படும். அச்சைவத்தின் கொள்கையே சித்தாந்தம் என வழங்கப்படும். இறைவனை சித்தத்தின் வழி கண்டு ஆனந்தமடைந்தது உமாமதி சிவம் இறைவன் உயிர்களுடன் உடலும் உயிரும் போலும் ஒன்றாகவும், கண்ணும் சூரியனும் போல் வேறாகவும் இயந்து நிற்றலை உணர்த்தியவர். அவர் தாம் எழுதிய திருவருட்பயன் என்னும் நூலில் காணலாகும் வாழ்க்கை நெறிமுறைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முதன்மைச் சொற்கள்

நிட்டை-தியானம்; திரிபுடி-அறிவுக்குரிய காண்பான்; உற்கை-தீவட்டி; சகலம்-உதலாவத்தை (எல்லாம்)

## இறைவனின் மூவகை நிலை

உலகத்துப் பொருள்களெல்லாம் மூவகையாக, அருவப் பொருள், உருவப்பொருள், அருவுருவப்பொருள் எனப் பகுக்கப்படும். இவற்றுள் இறைவனை அருவம் என்பர்.

> **அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்**
> **உருவும் உடையான் உளன்** (திருவருட்பயன், 5)

வேறு சில மதங்களில் அவனை உருவம் முடையான் என்பர். இவ்வாறு மூன்றில் ஒன்றோ அல்லது இரண்டோ என்று இறைவனின் உண்மை இயல்பு எனக் கொண்டால் அக்கருத்து குறைபாடு உடையது எனக்கூறுகிறார்.

இறைவனின் உண்மை இயல்பு மெய்யுணர்ந்தார்க்கு அறிய வகும். அந்நிலையில் இறைவன் அறிவின் திரட்சியே ஆகி நிற்பதை அவர்கள் உணர்வார்கள் என்பது “அறிஞர்க்கு அறிவாம் உருவும் உடையான்” என்ற சொற்களால் உணர்த்தப்பட்டது. மெய்யுணர்வு பெறாதார் பொருட்டு இறைவன் மேற்கொள்ளும் மூவகைத் திருமேனிகளும் “அருவும் உருவம் உடையான் உளன்” என்று சுட்டப்பட்டுள்ளது.

## இறை அருளும் உலக வாழ்வியலும்

இறை அருள்தான் உயிரோடு, உடம்பு, மனசு உலகத்தோடு இணைக்கின்றது. இவ்விணைப்பே உலக வாழ்க்கைக்கு அடிப்படை என்று கூறுகின்றது. திருவருட்பயனில் ஐந்தாம் அதிகாரம் அருளும் நிலையாகும். இது உயிருக்கு ஆதாராமாயும், அருந்துணையாகவும் நிற்பது இறைவனின் திருவருளே என்று கூறுகின்றது.

எனினும் தளைகளினால் கட்டில் அகப்பட்ட உயிர்கள் இறைவனை அடைய முடியாமல் துயரம் அடைகின்றன. இந்த துயரத்தைப் போக்க ஆசிரியராய், குருவாய் இறைவன் வந்து உயிர்களுக்கு போதனை செய்ய வருவான். உயிர்கள் தாமகவே சிவன் ஞானத்தை அறிதல் இயலாது. ஓர் உயிர் மற்றோர் உயிருக்கும் அறிவித்தலும் இயலாது. இவ் அதிகாரத்தின் ஒவ்வொரு பாடலிலும் ஒழுக்கமான வாழ்க்கைக்கு இறை அருள் துணை புரிவதோடு, உடல், மனம், உலகம், நுகர்ச்சிப் பொருள்கள் இவற்றுடன் இறையருள் ஒன்றுபட்டு வாழ்வதே வாழ்வியல் என்று உமாபதி சிவாச்சாரியார் கூறுகின்றார்.

ஒழுக்கமான ஆரோக்கியமான வாழ்க்கைக்கும் இறை அருள் துணைபுரியும் என்று உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன் நூல் மூலம் விளக்குகின்றார். இந்த வாழ்வியல் தத்துவங்களை விளக்கும் திருவருட்பயன் வாழ்வின் இறுதி இலக்கான ஞானத்தைப் பெறுவதற்கு உதவுகின்றது.

**ஆணவ மலம் நீங்குதல்**

உலக வாழ்க்கையின் நோக்கம் ஆணவம் என்னும் மலத்தை நீக்குவதே. இது வாழ்வின் அடிப்படைத் தத்துவத்தை விளக்குகின்றது.

திருவருட்பயனில் ஆணவ மலம் நீங்குதல் பற்றி மூன்றாவது அதிகாரம் இருள் மல நிலையில் கூறப்படுகின்றது. இதனை உமாபதி சிவாச்சாரியார் தளைகளில் மிகக்கொடியது “இருள்” என்று பெயர் வாங்கிய ஆணவ மலமே என்று இயம்புகின்றார்.

ஆணவ மலமே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படையான காரணமாக இருப்பதனால் மூலமலம் என்றும், தோன்றிய காலம் தொட்டு உயிர்களோடு பொருந்தி இருப்பதனால் சகசமலம் என்றும் அழைக்கப்படுகின்றது.

“இருண்மல நிலை அதிகாரத்தில் முதல் ஒன்பது பாடல்களிலும், ஆணவமலத்தைக் கூறி இறுதியாக பத்தாவது பாடலில் மாயை, கன்மம் பற்றி குறிப்பிடுகின்றார்”.

இருள் மலநிலையில் முதற் பாடலில்,

**“துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்**

**பொருளும் இன்று என்பது எவ்வாறு இல்**
(திருவருட்பயன், 21)

தொடர்ந்து வரும் பிறவித் துன்பமும் அதை விட்டு நீங்கியபின் கிடைக்கும் வீட்டு இன்பமும் உயிர்களுக்கு தரும் துணைப் பொருள்களும் இல்லையென்று சொல்வதற்கில்லை என்று குறிப்பிடுகின்றார்.

ஆணவ மலம் உயிரின் அறிவை மறைத்தும், கீழ்நோக்கி செலுத்தியும், எல்லாத் துன்பத்திற்கும், கேட்டிற்கும் காரணமாய் உள்ளது. இதுவே சைவ சித்தாந்தத்தின் ஆணிவேர்க் கொள்கை யாகும். ஆணவமலம் இல்லையெனில் உலகத் துன்பங்களுக்கும் காரணம் இல்லை.

ஆணவமலமே உயிர் தன்னை அறியவிடாமலும் தொடர்ந்து வரும் பிறப்பு, இறப்புக்களை அறிய விடாமலும் செய்கின்றது. இவற்றுடன் வீடு பேற்றின் இன்பத்தை உயிர்கள் அறியாமலும், திருவருளை உயிர் அறியாவண்ணமும் அறிவுடைய உயிரை தன்னுடைய அந்தக் கரணத்தினால் அறிவற்றது போல் இவ் ஆணவமலம் தொழிற்படும்.

இந்த இருண்மல நிலை என்ற அதிகாரத்தில் ‘இருள்’ என்ற ஆணவ மலத்தினால் உயிர்கள் கட்டுண்டு அவற்றின் அறிவை மறைப்பதினால் வாழ்வின் நெறிகளை கடைப்பிடிக்க முடியாமல் துன்பம் ஏற்படுகின்றது. இவ் அதிகாரத்தில் உயிர்கள் அறியாமையால் இருக்கின்றது என்று அறியப்படுகின்றது.

**உயிர் இறைவனின் திருவருளைப் பற்றிக் கொள்ளுதல்**

ஆணவ மல மறைப்பிலும் உயிர் இறைவனின் திருவருளைப் பற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல் அது என்றும் உயிரைவிட்டு நீங்குவதில்லை என்பார்.

**“ஒன்றுமிகினும் ஒளிகவராதேல் உள்ளம்**

**என்றும் அகலாது இருள்”** (திருவருட்பயன், 29)

இவ்வளவு வலிமை உடைய ஆணவம் உயிரை விட்டு நீங்குமா நீங்காதா, நீங்குமாயின் எப்போது நீங்கும் யாரால் நீங்கும் என்ற கேள்விகளுக்கு விடைதருவதாக அமைந்தது.

உயிர் ஆணவ மலத்தோடு கொண்ட தொடர்பினால் தன் வியாபகத் தன்மை நீங்கி, அணுத்தன்மை பெற்று அறியாமையில் மூழ்கிக்கிடக்கிறது. இந்த நிலையில் உயிருக்கு உதவி செய்வார் இறைவனை அன்றி வேறுயாரும் இலர் என்கின்றது.

இவர் அருளிச் செய்த கொடிக்கவி என்னும் நூலில்,

**“ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்று**

**மேலிடில் ஒன்று**

**ஒளிக்கும் எனினும் இருள் அடறாது உள்**

**உயிருக்கு உயிராய்த்**

**தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளதேனும்**

**திரிமலத்தே**

**குறிக்கும் உயிர் அருளும் கூடும்படி கொடி**

**கட்டினேனே"** (கொடிக்கவி)

என்பர். ஆணவமலம் கொடிதாயினும் இறைவ னின் முன் அஃது அடர்ந்து எழும் வல்லமை அற்றது என்கிறார்.

**வாழ்வியல் நெறிகள்**

வாழ்வியல் நெறிகள் என்பவை மனிதர்கள் சிறப்பாக வாழ்வதற்கும், சமூக வளர்ச்சி, சமூகத்தின் நன்னெறி வாழ்க்கைக்கும் உள்ள நெறிகளே வாழ்க்கைக்குத் தேவையான நெறிகளாகக் கருதப்படுகின்றது.

வாழ்வியல் நெறிகள் சங்க இலக்கியம், திருக்குறள், திருமந்திரம், திருவருட்பயன் பக்தி இலக்கியங்கள் எல்லாவற்றிலும் கூறப்பட்டுள்ளன. காலத்துக் காலம் வாழ்வியல் நெறிகள் பற்றி அறிவுறுத்தப்பட்டே உள்ளது.

வாழ்வியல் நெறிகள் ஒரு மனிதனை நன்னெறி, நேர்மை, அன்பு, அறம் மற்றும் உலக ஒழுக்கம் என வாழ்வியலின் மையமாக உள்ளடக்குகின்றது.

அறநெறி நூல்கள் தனி மனிதனின் வாழ்வை அர்த்தமுள்ளதாகவும், பண்புள்ளவனாகவும் இவற்றுடன் அறநெறியுள்ளவனாகவும் மாற்றுகின்றது.

திருவருட்பயன் குருவின் வழிகாட்டுதலுடன், உலகியல் வாழ்க்கையில் எவ்வாறு வாழலாம். வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகின்றது. இன்றைய காலக்கட்டத்தில் மனிதர்கள் பரபரப்பாக ஒடிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இதனால் மனிதப் பண்புகளான அன்பு, நட்பு, ஈகை, வாய்மை பற்றிய அறநூல்களை படித்து வாழ்வியல் நெறிகள் பற்றி அறிந்து வாழ வேண்டும் என அறிவுறுத்துகின்றன.

திருவருட்பயனில் உயிர்கள் குருவின் அருள் பெற்று வாழ்வியல் நெறிகளின்படி வாழ்ந்து நற்பேறு அடைய வேண்டும் என உமாபதி சிவாச்சாரியார் எடுத்து இயம்புகின்றார்.

**மெய் பொருளை அறிவது**

புலன்களால் காண்பவை எல்லாம் பொய் என்றால் மெய்பொருளை அறிதற்கு ஐம்புலன்கள் உரிமை உடையன அல்ல. அவற்றின் துணையின்றி அறியமுடியாத உயிரும் உரிமை உடையதாயிற்று என்பர்.

**ஐம்புலனால் தாம் கண்டு அகன்றால் அது ஒழிய**

**ஐம்புலனார் தாம் ஆர் அதற்கு**

(திருவருட்பயன்,69)

இப்பாடலின் பொறிப் புலன்களால் அறியப் படுகின்ற பொருள்களை மட்டும் உண்மை என ஏற்றுக் கொண்டு மற்றவற்றை இல்லை என மறுத்துக் கூறுவர். சொல்லும் மனமும் கடந்து நிற்பதே மெய்ப்பொருள். எல்லைக்குட்பட்ட அறிவு, எல்லையற்ற இறைவனை அறியப் பயன்படாது.

உயிர் அறிவுடைய பொருளேயாயினும் அது ஐம்பொறிகளின் உதவியின்றி அறிக்கின்ற வல்லமை உடையதன்று. எனவே வாழ்வில் மெய்பொருளை உணர்த்துவது திருவருள் ஒன்றே என்பதை அறியமுடிகின்றது.

**வாழ்வியல் தத்துவங்கள்**

திருவருட்பயன், திருக்குறள் வாழ்வியல் தத்துவங்களை அழகாக கூறுகின்றது. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற முப்பால் உணர்த்தி வீடு பேற்றினை உய்த்து உணரலாம் என்று கூறுகின்றது.

உலக வாழ்க்கை இனிமையானதாகவும் உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கும் அறநூல்கள் காலத்திற்கு காலம் அறிவுறுத்திக் கொண்டே உள்ளன.

திருவருட்பயனில் உமாபதி சிவாச்சாரியார் அறம், பொருள், இன்பம், வீட்டுப் பேற்றினையும், அருளியுள்ளார். வாழ்வியல் தத்துவத்தின் முக்கியக் கூறுகளான குடும்ப உறவுகளின் பண்பாடு, அறநெறிகள் பற்றியவை இந்த நூலில் அமைந்துள்ளன.

தத்துவங்கள் இறைவனை அறியும் அறிவுப் பாதைகள் ஆகும். அறிவுப் பாதைக்குரிய நூல்கள் சாத்திரங்கள் என்றும், உணர்வு நெறிகளில் விளங்கும் பக்தி நூல்கள் தோத்திரங்கள் எனப்படுகின்றன.

சாத்திரங்கள் அறிவுப்பதிவுகள், தோத்திரங்கள் அனுபவப் பதிவுகள், சைவர்களுக்கான தத்துவம் சைவ சித்ததாந்தமே. ஆதலால் திருமுறை களைத் தோத்திரங்களாக கொண்ட சைவர்கள் சைவ சித்தாந்தத்தை சாத்திரமாகக் கொள்வது நன்று.

**ஆன்மீக வாழ்வின் அடித்தளம்**

திருவருட்பயன் சைவ சித்தாந்த நூல்களில் உமாபதி சிவாச்சாரியால் எழுதப்பட்ட நூல்களில் ஒன்றாகும்.

திருவருட்பயன் ஆன்மீக வழியில் பயணிப்பவர் களுக்கு வழிகாட்டியாக உள்ள நூல் ஆகும்.

திருவருட் பயனில் உமாபதி சிவாச்சாரியார் பத்து அதிகாரங்களில் பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) பற்றியும், உயிர் எவ்வாறு ஆணவமலத்தில் கட்டுண்டு இறையருளை பெறமுடியாமலும், வாழ்வியல் நெறிகளை கடைப் பிடிக்க முடியாமலும் உள்ளது என்பதையும் கூறுகின்றார்.

ஆன்மீக வாழ்க்கை நெறிகளை அடைய முடியாமலும் ஆணவ மலம் அறிவை மறைத்துள்ளது. ஆன்மீக வாழ்க்கைக்கு இறைவனே குருவாக வந்து வழிகாட்டுவார் எனவும் அவரது பாடல்கள் மூலம் திருவருட் பயனில் அறிவுறுத்துகின்றார்.

**“தரையை அறியாது தாமே திரிவார்**

**புரயை உணரா புவி”** (திருவருட்பயன், 36)

பூமியில் வாழ்பவர்கள் தம்முடைய சரீரா முயற்சியால் பூமியில் வாழ்ந்து தமக்கு வேண்டியவற்றைப் பெறுகின்றார்கள்.

பூமியெல்லையெனின் ஒரு கணப்பொழுதும் வாழமுடியாது என்பதை மறந்து விடுகின்றார்கள். இதேபோல் திருவருளை அறியாத உயிர்கள் திருவருள் கொடுத்த சக்தியைக் கொண்டு வாழ்வனவாயினும் ஆணவம் கொண்டு எல்லாம் தம்மால் நடப்பதாக எண்ணி வாழ்கின்றனர்.

**முடிவுரை**

திருவருட்பயனில் உமாபதி சிவாச்சாரியார் சமூகத்தில் எவ்வாறு வாழ்வியல் நெறிமுறைக ளோடு வாழவேண்டும் என்பதை தனது இந்த நூலில் உள்ள நூறு பாடல்கள் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

இறையருள் பெற்று, உலக வாழ்க்கையில் அறம், இன்பம், பொருள் இத்துடன் வீட்டுப் பேற்றினையும் அடையலாம் என்பதினை வலியுறுத்தியுள்ளார்.

உலக வாழ்க்கையில் இறையருள் கிடைக்கும் என்பதினையும், உயிரிலிருந்து ஆணவ மலத்தை எவ்வாறு நீக்கலாம் என்பதையம் தனது நூல்களில் அறிவுறுத்தியுள்ளார். சைவ சமய சாத்திர நூல்களில் மகிமையை அறிந்து நல்ல சமூகத்தை உருவாக்கி அறநெறியில் வாழ்வதற்குத் துணைபுரிவோம்.

**துணைநூற்பட்டியல்**

1. சு. சிவபாசு சுந்தரனார், **உமாதி சிவாச்சாரியார் அருளிச் செய்த திருவருட்பயன் இலங்கை சைவப் பெரியார்,** சத்தியா பதிப்பகம், புதிய எண் 77, 53வது தெரு, 9வது அவென்யூ, அசோக் நகர், சென்னை, 2021.
2. நெல்லை கி.சு. மணி, **சைவசித்தாந்த சாத்திரங்கள் (பகுதி – 2),** சித்தாந்த பண்டிதர், தென்னிந்திய திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், 552, டி.டி.கே. சாலை, சென்னை – 18, 2014.
3. நெல்லை கி.சு. மணி, **சைவசித்தாந்த சாத்திரங்கள் (பகுதி – 3),** சித்தாந்த பண்டிதர், தென்னிந்திய திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், 552, டி.டி.கே. சாலை, சென்னை – 18, 2014.
4. முனைவர் ச. இராசவன்னியன், **உமாபதி சிவாச்சாரியாரின் இலக்கிய நூல்கள் ஓர் ஆய்வு,** தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 2000.

## கருப்பு / கறுப்பு எது சரி?

‘கறுப்பு’ என்பது ‘சினம், நிறம்’ என்னும் இரு பொருள்களையும் குறிக்கும் என்கிறது தொல்காப்பியம்.

கருப்பு – என்பதற்குப் ‘பஞ்சம்’ (Famine/scarcity) என்பது பொருள். எனவே, நிறத்தையோ, சினத்தையோ குறிப்பதாக இருந்தால், கறுப்பு என்றே எழுத வேண்டும்.

இதே கறுப்பு பெயரடையாக வரும்போது, இடையின ரகரம் பெற்று வரும்.

கருங்குரங்கு; கருமேகம்; கரும்பலகை; கருங்கூந்தல்